//

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC 128/2022

**prosecution witness: LW4 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சேதுமுனியாண்டி | ஜாதி | : | |
| க/பெ. | : | கன்னுச்சாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

(Solemnly Affimed in Awordance with oath's act 1969)

**12.05.2025**

(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)

**முதல் விசாரணை :-**

நான் தற்போது இராமேஸ்வரம் மாங்காட்டில் குடியிருந்து, கூலிவேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதும் எனக்குத் தெரியாது. போலீசார் கையொப்பம் செய்ய கூறினார்கள். கையொப்பம் செய்தேன்.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் கடந்த 27.10.2020 ம் தேதியில் 15 மணிக்கு மாங்காட்டில் உள்ள இராணியின் வீடு முன்பாக சார்பு ஆய்வாளர் என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், கிருஷ்ணரும் என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

ஓம்/- S.B. Sujith, B.A.,B.L..,(hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

//

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC 128/2022
**prosecution witness: LW5 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கிருஷ்ணன் | தொழில் | : | மீன்பிடித்தொழில் |
| க/பெ. | : | கருப்பையா | வயது | : | 55 |
| கிராமம் | : | மாங்காடு | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | இராமேஸ்வரம் | | | |

(Solemnly Affimed in Awordance with oath's act 1969)
<u>12.05.2025</u>
(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)
<u>முதல் விசாரணை :-</u>

நான் தற்போது இராமேஸ்வரம் மாங்காட்டில் குடியிருந்து, மீன்பிடித்தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தமாக எதும் எனக்குத் தெரியாது. போலீசார் காவல் நிலையத்தில் கையொப்பம் செய்ய கூறினார்கள். கையொப்பம் செய்தேன்.

**(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்ட்டது.)**
<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை:</u>
போலீசார் விசாரணையில் கடந்த 27.10.2020 ம் தேதியில் 15 மணிக்கு மாங்காட்டில் உள்ள இராணியின் வீடு முன்பாக சார்பு ஆய்வாளர் என் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் சரியல்ல. அந்த பார்வை மகஜரில் நானும், சேதுமுனியாண்டி என்பவரும் கையொப்பம் செய்ததாக போலீசார் விசாரணையில் தெரிவித்துவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.**

ஓம்/- S.B. Sujith, B.A.,B.L..,(hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC 8/2024
**prosecution witness: LW2 as PW-2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செல்வம் | தொழில் | : | அரசுப்பேருந்து ஓட்டுநர் |
| க/பெ. | : | இராமகிருஷ்ணன் | வயது | : | 50 |
| கிராமம் | : | P ஆழங்குளம், மேலநத்தூர் | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | மானாமதுரை, சிவகங்கை | | | |

(Solemnly Affimed in Awordance with oath's act 1969)
**12.05.2025**
(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)
**முதல் விசாரணை :-**

நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். அரசு பேருந்து ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன், எனது வில்லை எண். 12DR3650 ஆகும், நான் TN 63 N1713 என்ற திருப்பத்தூர் கிளை அரசு போக்குவரத்துக்கழக் பேருந்தில் நடத்துநராக பணிபுரிந்து வந்தேன். என்னுடன் நடத்துநர் வடமலை என்பவரும் பணியில் இருந்து வந்தார், எங்களது பேருந்து திருப்பத்தூர் முதல் இராமேஸ்வரம் வரை இயக்கப்பட்டு வந்தது. வழக்கமாக இரவு 10.30 மணியளில் பயனிகளை இறக்கிவிட்டு மண்டபம் இரயில்வே நிலையத்தில் தங்கி விடுவோம். கடந்த 08.11.2023 ம் அதிகாலை 3 மணியளவில் இரயில் பயனிகள் வந்தவுடன் மண்டபம் இரயில்வே நிலையத்தில் இருந்து இரயில் பயணிகளை ஏற்றி பேருந்தை இயக்கி இராமேஸ்வரம் பேருந்து நிலையம் சென்று இறக்கிவிடுவோம். அது சிறப்பு பணியாக செய்து வந்தோம்.

கடந்த 08.11.2023 ம் தேதி 3 மணியளவில் பேருந்து இயக்க தயாராகி கொண்டிருந்த போது குடிபோதையில் வந்த சதீஸ் என்பவர் பேருந்துக்குள் வந்து திருப்பத்தூர்காரனுக்கு என்ன வேலை என்றும், ஏன்டா புன்டா மவனே இங்க வர்றீங்க என்று திட்டினார், அடிக்கவும் வந்தார். ஆட்டோ ஸ்டான்டில் உள்ள நபர்கள் வந்து விளக்கி விட்டார்கள். அப்போது எங்களது பயணச்சீட்டு ஆய்வாளர் நாகராஜன் வந்தார். அவரிடம் விவரத்தை கூறியபோது மேற்சொன்ன நபர் சென்றுவிட்டார். அப்போது நாகராஜன் ரோந்து வந்த போலீசாரிடம் கூறிய போது அந்த நபர் பெயர் பற்றி ஆட்டோ ஸ்டான்டில் உள்ள நபர்களிடம் விசாரித்து போலீசார் கூறியதன் அடிப்படையில் அவரின் பெயர் சதீஸ்குமார் என்று தெரிந்து கொண்டேன். அவரை தற்போது பார்த்தால் அடையாளம் காட்ட இயலாது, தூக்க கலக்கத்தில் இருந்ததால் இப்போது என்னால் அடையாளம் காட்ட முடியாது. அதற்காக மண்டபம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள ஓட்டுநர் என்ற கையொப்பம் என்னுடையது. அதில் நடத்துநர் வடமலை என்பவரும் கையொப்பம்

செய்தார். அந்த புகார் மனுவில் உள்ள செல்வம் என்வரின் கையொப்பம். **அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.. இது சம்பந்தமாக போலீசார் என்னிடம் விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>

நான் முதல் விசாரணையில் கூறிய விவரத்தை தான் போலீசார் விசாரணையில் கூறியிருந்தேன் என்றால் சரிதான். எங்களுக்கு மண்டபம் இரயில்வே நிலையத்தில் இருந்து இராமேஸ்வரம் கோவிலுக்கு செல்ல எழுத்துப்பூர்வமான உத்தரவு வழங்கப்பட்டுள்ளதா என்றால் இல்லை, வாய்மொழியாகத்தான் உத்தரவு பிறப்பபிக்கப்படும். இரயில் நிலையத்தில் இருந்து எங்கள் பேருந்து சுமார் 5 மீட்டர் துாரத்தில் சம்பவ இடத்தில் நின்று கொண்டு இருந்தது. நானும் நடத்துநரும் துாங்கி கொண்டிருந்ததால் யார் வந்தார்கள் என்ற விவரம் எங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். புகார் கொடுத்த பின் போலீசார் எங்களை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் மேற்சொன்னது போல் எந்த சம்பவம் நடக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்கும் ஆட்டோ மற்றும் கார் ஓட்டுநர்களுக்கு இடையே பயணிகள் ஏற்றுவது தொடர்பாக பிரச்சனை இருந்து வந்தது என்றால் சரிதான். அவர்களை மிரட்டுவதற்காக பொய்யாக புகார் மனு கொடுத்தேன் என்றால் சரியல்ல.

ஓம்/– S.B. Sujith, B.A.,B.L..,(hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.

DEPOSITION OF THE WITNESS

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
வழக்கு எண். CC 8/2024
**prosecution witness: LW3 as PW-3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | நாகராஜன் | தொழில் | : | அரசுப்பேருந்து பயனச்சீட்டு ஆய்வாளர் |
| க/பெ. | : | முத்து | வயது | : | 61 |
| கிராமம் | : | குப்பான்வலசை | சமயம் | : | இந்து |
| தாலுகா | : | மண்டபம் ஒன்றியம், இராமநாதபுரம். | | | |

(Solemnly Affimed in Awordance with oath's act 1969)
**12.05.2025**
(எதிரி மனுவின் பெயரில் ஆஜர் இல்லை, எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்,)
**முதல் விசாரணை :-**

நான் தற்போது மேற்சொன்ன முகவரியில் குடியிருந்து வருகிறேன். அரசு பேருந்து அரசுப்பேருந்து பயனச்சீட்டு ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று விட்டேன், எனது வில்லை எண். 90108 ஆகும், TN 63 N1713 என்ற திருப்பத்துார் கிளை அரசு போக்குவரத்துக்கழக் பேருந்தில் நடத்துநராக வடமலை என்பவரும், ஓட்டுநகராக செல்வம் என்பவரும், பணிபுரிந்து வந்தார்கள். அவர்களது பேருந்து திருப்பத்துார் முதல் இராமேஸ்வரம் வரை இயக்கப்பட்டு வந்தது. வழக்கமாக இரவு 10.30 மணியளில் பயனிகளை இறக்கிவிட்டு மண்டபம் இரயில்வே நிலையத்தில் தங்கி விடுவார்கள்.

கடந்த 08.11.2023 ம் அதிகாலை 3 மணியளவில் இரயில் பயனிகள் வந்தவுடன் மண்டபம் இரயில்வே நிலையத்தில் இருந்து இரயில் பயணிகளை ஏற்றி பேருந்தை இயக்கி இராமேஸ்வரம் பேருந்து நிலையம் சென்று இறக்கிவிடுவார்கள். அது சிறப்பு பணியாக செய்து வந்தோம். நானும் மண்டபம் இரயில்வே நிலையத்தில் தான் பணியில் இருப்போம்.

கடந்த 08.11.2023 ம் தேதி இரவு 3 மணியளவில் சத்தம் கேட்டது. ஓட்டுநரும், நடத்துநரும் யாரோ அவர்களிடம் பேக்கை பரிப்பதாக கத்தினார்கள். அங்கு மேலும் 3 அரசு பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.அதில் உள்ள ஓட்டுநர்கள், நடத்துநர்கள் சத்தம் கேட்டு அங்கு வந்த போது மேற்சொன்ன பேருந்தில் இருந்து ஒரு நபர் இரங்கி ஓடினார், அப்போது நடத்துநர் கடைசி சீட்டில் உட்காந்து கொண்டு இருந்தார், என்னவென்று கேட்ட போது நாங்கள் எவ்வளவு சத்தம் போட்டும் இப்போது தான் வருகிறிர்கள் என்றும் ,கம்பியை வைத்து அடித்திருப்பார் என்றும் கூறினார். அந்த நபர் சதீஸ்குமார் என்று சக ஆட்டோ மற்றும் வேன் ஓட்டுநர்கள் மூலமாக தெரிந்து கொண்டேன். இரயில்வே போலீசார் வந்து ஆட்டோ மற்றும் வேனை அங்கு நிறுத்த அனுமதி இல்லை என்றும் எவ்வாறு அரசு பேருந்து ஓட்டுநர் நடத்துநரிகளிடம் எவ்வாறு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டார். பின்பு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அந்த நபரை நான் பார்கக வில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.</u>**

சம்பவம் நடந்தபோது நான் இரயில் நிலையத்திற்கு உள்ளே இருந்தேன் என்றால் சரிதான். சத்தம் கேட்டுதான் நான் அங்கு வந்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலீசார் விசாரணியில் கூறினேன் என்றால் சரிதான். நான் ஓட்டுநர் மற்றும் நடத்துநர் கூறிய பின் விவரத்தினை தெரிந்து கொன்டேன் என்றால் சரிதான். போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

ஒம்/— S.B. Sujith, B.A.,B.L..,(hons)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.